# பொது இடத்தில் வியாபாரம்

# பொருட்கள் பறிமுதல்



கோலாலம்பூர், நவ.10-

பசார் போரோங் கோலாலம்பூர், பூசாட் பண்டார் உத்தாரா கோலாலம்பூர் ஆகிய பகுதிகளில் பொது இடங்களிலும் உணவக இடங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்க சுகாதார சுற்றுச்சூழல் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

நேற்றுமுன்தினம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது அறிக்கையில் கூறியது. பொது இடங்களில் விற்பனைப் பொருட்களை வைத்திருந்ததாக 12 கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. தூய்மையைக் கடைப்பிடிக்காத உணவுக் கடைகளை மூடுவதற்கும் உத்தரவிடப்பட்டது.

1974ஆம் ஆண்டு சாலை, வடிகால் , கட்டட சட்டத்தின் கீழும் 2016ஆம் ஆண்டு உணவு, லைசென்ஸ் விதிமுறைகள் கீழும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங், தாமான் மிஹார்ஜா செராஸ், கோலாலம்பூரில் உள்ள கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன.